<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>

<u>அ.வ.எண். 233/2024</u>

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17–ம் நாள் செவ்வாய்கிழமை **வா.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தேவி | தொழில் | கூலி |
| க/பெ | உதயகுமார் | கிராமம் | திருப்பூர் ரோடு, காங்கயம் டவுன் |
| வயது | 55 | தாலுகா | காங்கயம் |
| | | மாவட்டம் | திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. என்னுடைய தாயார் கடந்த முறை நீதிமன்றத்துக்கு வந்த போது நான் உடன் வரவில்லை. என்னை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கை என்னுடைய தாயார்தான் தாக்கல் செய்துள்ளார். என்னுடைய தாயார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது அவரது இரண்டு மகள்களும் அவருடன் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ள விபரம் எனக்கு தெரியும். என்னுடைய தாயாரிடம் சொத்தின் பெயரில் கடன் வாங்குவதாகவும், ஒருவருடத்தில் திருப்பி கொடுப்பதாகவும் கையெழுத்து பெற்றார்கள். மேற்படி சங்கதியை என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய தாயார் 2019 ஆம் வருடம் முதல் தாசில்தார் அலுவலகத்திலும் பதிவு அலுவலகத்திலும் செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்து கொடுக்கச் சொல்லி மனு கொடுத்து வரும் விபரம் எனக்கு தெரியும்.

2. இந்த வழக்கை என்னுடைய தாயாரை முன் நிறுத்தி நான் தான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தாயார் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி தாவா சொத்துக்கள் அனைத்தும் 1–ம் பிரதிவாதியின் அனுபவத்திற்கு வந்துவிட்டது என்றாலும் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வந்து விட்டது என்று சொன்னாலும் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்தால் சொத்து நான் அடையலாம் என்பதற்காக இந்த வழக்கை என்னுடைய தாயாரை வைத்து நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.17 21:44:13 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.